**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**
**ந.க.எண்.1830/மாஓ1/நா.மு/ஒபக/2023, நாள்: 15.11.2023**

பொருள் : நான் முதல்வன் – உயர்கல்வி வழிகாட்டி திட்டம் – கருத்தாளர்களுக்கு மண்டல அளவிலான இரண்டு நாள் பயிற்சி மற்றும் வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு 07.12.2023 அன்று ஒரு நாள் புத்தாகப் பயிற்சி அளித்தல் – நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை : தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்:2349/ஆ2/நா.மு.35/ஒபக/2023, நாள்:10.11.2023.

------

பார்வையின் காண் கடிதத்தின்படி, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உள் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் உயர்கல்வி வழிகாட்டுதுல் மற்றும் ஆலோசனைகள் வழங்குவதற்காக நடப்பு கல்வியாண்டில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவில் ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, திருச்சி, சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கும் உயர்கல்வி வழிக்காட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி அக்டோபர் மாதம் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்கு ஒரு மாவட்டத்திற்கு 5 கருத்தாளர்கள் வீதம் 38 மாவட்டங்களில் 200 கருத்தாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இக்கருத்தாளர்களுக்கு வருகின்ற நவம்பர் 23.11.2023 முதல் 05.12.2023 வரை மண்டல வாரியாக இரண்டு நாட்கள் உண்டு உறைவிட பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, வேலூர் மாவட்டத்திற்கு மண்டல அளவிலான பயிற்சி 04.12.2023 & 05.12.2023 ஆகிய இரண்டு நாட்கள் இணைப்பில் உள்ள 5 கருத்தாளர்கள் கலந்து கொள்ள வேண்டுமென சார்ந்தவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பதவி | பெயர் | பணிபுரியும் இடம் | கைபேசி எண் |
|---|---|---|---|---|
| 1 | விரிவுரையாளர் | திரு. சி.குமார் | DIET, Ranipet | 9952827311 |
| 2 | விரிவுரையாளர் | திருமதி.அலுமேலு | DIET, Ranipet | 8072747120 |
| 3 | ஆசிரியர் பயிற்றுநர் | திரு.பி.லெனின் | வட்டார வளமையம், காட்பாடி | 9363051735 |
| 4 | மாதிரி பள்ளி ஆசிரியர் | திரு. சந்தோஷ் குமார் | Model School TCS | 9962602216 |
| 5 | NGO | திரு. விக்னேஷ் குமார் | TNE Fellow வேலூர் மாவட்டம் | 9566432128 |

மண்டல அளவிலான பயிற்சி பெற்ற பிறகு, இக்கருத்தாளர்கள் மாவட்ட அளவிலான பயிற்சிக்கு திட்டமிடல் கூட்டம் நடத்துதல் வேண்டும். அதனைத் தொடர்ந்து இக்கருத்தாளர்கள் **வேலூர் மாவட்டத்தில் உள்ள உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு பயிற்சி நடைபெறும் நாள் 07.12.2023 ஒரு நாள் புத்தாக்க பயிற்சி நடைபெறும் இடம் மாவட்ட திட்ட அலுவலகம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, கூட்ட அரங்கம், காந்தி நகர், காட்பாடி.** இப்பயிற்சியில், அனைத்து அரசு மேல்நிலைப் 71 பள்ளிகளில் உள்ள உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் அனைவரும் (CG–PG Teachers) தவறாது கலந்து கொள்ள வேண்டும். அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரிகள் உறுதி செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **ஒரு பள்ளியில் 250 மாணவர்களுக்கு 1 உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர் என்ற விகித அடிப்படையில் இப்பயிற்சி ஆசிரியர்களை பங்கேற்பதை உறுதி செய்திடல் வேண்டும்.** பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவு, தேநீர் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஆகவே தலைமையாசிரியர்கள் இப்பயிற்சிக்கு ஆசிரியர்கள் பங்கேற்பதை உறுதி செய்திட வேண்டும்.

14/11/23

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளி கல்வி
வேலூர் மாவட்டம்.

15/11/23. 15/11/23

பெறுதல் :

1. முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை.
2. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
3. தலைமையாசிரியர், மாதிரி பள்ளி பிள்ளையார்குப்பம், வேலூர் மாவட்டம்.
4. வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.
5. TNE Fellow, வேலூர் மாவட்டம்.

நகல்

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்
   அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்
   அவர்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்காக அனுப்பலாகிறது.